இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முகாமைத்துவ கற்கைகள் பீடம்
முயற்சியாண்மையும் சிறு வணிக முகாமைத்துவமும் உயர்தர சான்றிதழ் கற்கை நெறி
OSC2402 – சிறு வணிகத்தை முகாமை செய்தல்
இறுதிப் பரீட்சை- 2024/2025

காலம்: இரண்டு (2) மணித்தியாலங்கள்

*திகதி: 31 மே 2025* | *நேரம்: பி.ப 1.30 - பி.ப.3.30*

அறிவுறுத்தல்கள்:

- <u>ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம்</u> விடையளிக்குக,
- அனைத்து வினாக்களும் சமமான புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

1. (a) இலங்கையில் ஒரு சிறு வணிகத்தைத் தொடங்குவதற்கு முன் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய காரணிகளை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

   (b) சிறிய வணிகங்களின் வளர்ச்சி நிலைகளைக் குறிப்பிட்டு, ஒவ்வொரு கட்டத்திலும் முகாமைத்துவ செயல்பாடுகள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பதைப் பற்றி விவாதிக்க. (15 புள்ளிகள்)

2. "வணிக நெறிமுறைகள் பெரிய அளவிலான நிறுவனங்களுக்கு மட்டுமே. சிறு வணிகங்கள் பெரும்பாலும் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமானதாகவும். சிறிய அளவில் இருப்பதாலும் அவை வணிக நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தேவையில்லை". மேற்கண்ட கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? உங்கள் விடைகளை எடுத்துக்காட்டுகளுடன் நியாயப்படுத்துக. (25 புள்ளிகள்)

3. (a) இலங்கையில் சிறு வணிக தோல்விகள் அதிகரிப்பதற்கான நான்கு (04) காரணங்களை பொருத்தமான உதாரணங்களைக் காட்டி சுருக்கமாக விவாதிக்க. (10 புள்ளிகள்)

   (b) ஒரு சிறு வணிக உரிமையாளர் தனது வணிகத்தை தோல்வியிலிருந்து பாதுகாக்கப் பயன்படுத்தக்கூடிய உத்திகள் யாவை? விளக்குங்கள். (15 புள்ளிகள்)

4. (a) ஒரு சிறு வணிகத்திற்கு மனித வள முகாமைத்துவ நடைமுறைகள் முக்கியம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? உங்கள் விடையை எடுத்துக்காட்டுகளுடன் நியாயப்படுத்துக. (10 புள்ளிகள்)

   (b) நீங்கள் ஒரு சிறு வணிக உரிமையாளராக இருந்தால், உங்கள் நிறுவனத்தில் மனித வளங்களை திறம்பட நிர்வகிக்க நீங்கள் பின்பற்றக்கூடிய வழிமுறைகள் யாவை? விளக்குக (15 புள்ளிகள்)

5. (a) உங்கள் கருத்துப்படி, தற்போதைய வணிகச் சூழலில் ஒரு சிறு வணிக உரிமையாளர் தக்கவைக்க வேண்டிய ஐந்து (05) மிக முக்கியமான திறன்கள் யாவை? விவாதிக்க. (10 புள்ளிகள்)

(b) இன்றைய அதிக போட்டி நிறைந்த சந்தையின் சவால்களை எதிர்கொள்ள, சிறு வணிக உரிமையாளர்களின் திறன்களை வளர்க்க இலங்கை அரசாங்கம் எடுத்த முயற்சிகள் போதுமானவை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? உங்கள் விடையை நிஜ வணிக உலக உதாரணங்களுடன் நியாயப்படுத்துக. (15 புள்ளிகள்)

*-பதிப்புரிமைக்குரியது-*